**வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. 11/2016**

எனது இல.**NP/07/10/01/82**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
**01.09.2016**

அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III பதவி மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III பதவி மற்றும் பயிற்சித் தரம் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2016 ஐப்பசி மாதம்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **28.09.2016** ஆகும்.

## 02 ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

02.1 2013.06.01 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண தொழிநுட்பவியல் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தரம் III அல்லது பயிற்சித்தரத்திலுள்ள பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு வடக்கு மாகாண தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீடசையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது 05 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான உரிமையினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03 தகைமைகள் :-

### 03.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில) பயிற்சித்தரம் (பயிற்சிக்காலம் 01 வருடம்)

**(அ). கல்வித் தகைமைகள்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஆ). தொழில்த் தகைமைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமை ஒன்றுடன் சேர்த்து தொடர்புபட்ட துறையில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

1. மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (NCT) (சிவில்) பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்த்துறை தொழிநுட்பவியலாளர் துறையில் உள்ள பொருத்தமான பதவிக்கு தேசிய சான்றிதழ் பாடநெறியினை (NCC) (சிவில்) திருப்திகரமாக பின்பற்றி உரிய சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள்.

**அத்துடன்**

**(இ). சேவை அனுபவம்**

தொடர்புபட்ட துறையில் ஆரம்பமட்ட / அதற்கு மேற்பட்ட சேவைப்பிரிவு ஒன்றில் நிரந்தரமான, திணைக்களப் பதவியில் முனைப்பான மற்றும் திருப்திகரமான பத்து (10) ஆண்டுகள் சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**03.2 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில) தரம் III (நேரடி ஆட்சேர்ப்பு)**

**(அ). கல்வித் தகைமைகள்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஆ). தொழில்த் தகைமைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் பதவியுடன் தொடர்புடைய ஒரு தொழில்த் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.

**அல்லது**

(2) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.

**அல்லது**

(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.

**அல்லது**

(4) அங்கீகரிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.

**அல்லது**

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

(6) தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பான தேசிய தொழில்த் தகைமை (NVQ) மட்டம் 6 இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி

தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள்.

**அத்துடன்**

**(இ). சேவை அனுபவம்**

தொடர்புபட்ட துறையில் ஆரம்பமட்ட / அதற்கு மேற்பட்ட சேவைப்பிரிவு ஒன்றில் நிரந்தரமான, திணைக்களப் பதவியில் முனைப்பான மற்றும் திருப்திகரமான ஐந்து (05) ஆண்டுகள் சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்குமுன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்குரிய நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி பந்தி **03.1(இ)** மற்றும் **03.2(இ)** இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான **பத்தாண்டு** மற்றும் **ஐந்தாண்டு** காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் தற்காலிக / அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி பந்தி **03.1(இ)** மற்றும் **03.2(இ)** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான **பத்தாண்டு** மற்றும் **ஐந்தாண்டு** காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது.

**04 ஆட்சேர்ப்பு முறை :-**

04.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும் பரிசீலிக்கப்படும் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

04.2 எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து, அவர்கள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

04.3 **2016.01.28**ஆம் திகதியில் உள்ளவாறான வெற்றிட எண்ணிக்கையின் 30% சதவீதத்திற்கு மேற்படாத வகையில் இப் பரீட்சை மூலம் தகைமைபெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்பப்படும்.

**05 பரீட்சைக் கட்டணம்**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகமொன்றில் ரூபா **500/-ஐ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** என்ற பெயருக்குச் செலுத்தியதற்கான காசுக்கட்டளையினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

**06 விண்ணப்பிக்கும் முறை**

6.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 4.5 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் 4.6 முதல் 7 வரையான பந்திகள் இரண்டாம் பக்கதிதிலும் ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணபத்தை **2016.09.28**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

6.2 விண்ணபப்படிவத்தில் 1.1 இன் கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது முழுப்பெயரின் இறுதியிலிருக்கும் பெயரை முதலில் எழுதி பெயரிலிருக்கும் அனைத்து பெயர் முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிடவேண்டும்.

**உதாரணம்**.- விண்ணப்பப்படிவத்தின் 1.2 இன்படி முழுப்பெயர் SIVAPRAGASAM CHANDRAKUMAR எனின் விண்ணப்பப்படிவத்தின் 1.1 இல் CHANDRAKUMAR.S. எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

6.3 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**வடக்கு மாகாண பொதுச்சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவை தரம் III / பயிற்சித்தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2016**" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

6.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

6.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும் (தொலைபேசி - 021 221 9939 தொலைநகல் இல – 021 221 9940).

**குறிப்பு :-**

கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 07 ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சை செய்வதற்கான உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 08 பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 09 சம்பள அளவுத்திட்டம் :-

- **இலங்கை தொழிலிநுட்ப சேவையின் (சிவில்) தரம் III பதவிக்கானது**

  பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **(MN 3- 2016)** க்கு ஏற்ப இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – 57,550/-** ஆகும். (ரூபா 32,375 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்

- **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில) பயிற்சித்தரம் (பயிற்சிக்காலம் 01 வருடம்)**

  பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 அட்டவனை V இற்கு அமைவாக, (மாதாந்தம்)

  1வது வருடம் - **ரூ 15,924.00**

  2வது வருடம் - **ரூ 16,100.00** ஆகும்

## 10 பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும் | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் கட்டட நிர்மானம் பற்றிய அடிப்படை அறிவு, கட்டடத்திற்கான மூலப்பொருட்கள், கட்டடத்திற்குரிய வரைவு(Plan) தயாரித்தல் மற்றும் வரைவை (Plan) விளங்கிக்கொள்ளுதல், அளவீடுகள், அடித்தளம், மண்ணின் வகை, வீதி நிர்மானம் மற்றும் பராமரிப்பு, மதிப்பீடு தயாரித்தல், நீர் விநியோகம், வடிகால் அமைப்பு மற்றும் கழிவகற்றல் ஆகியவற்றின் அறிவினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும். | 03 மணித்தியாலங்கள் | 100 |

**குறிப்பு** :-

(I) கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்காகப் பரீட்சார்த்திக்குள்ள தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(II) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதமாவது (40 %) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் எனினும் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கிலேயே ( Rank Order) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**11.** பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**12.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

**13.** இச் சுற்றுநிருபத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**14.** இவ் விளம்பரத்தினை வடமாகாண சபையின் www.np.gov.lk இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ரூ.வரதலிங்கம்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
***01.09.2016***

பிரதிகள் :-

1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம். - தகவலுக்காக
2. பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் - வட மாகாணம். - தகவலுக்காக
3. பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவைகள் - வட மாகாணம். - தகவலுக்காக